# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 02–ஆம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.58/2013
CNR No.TNTJ15-000041-2013

1.கலியபெருமாள்
2.மாரிமுத்து வாதிகள்

/எதிராக/

1.ஆறுமுகம் (இறப்பு)
2.ரெத்தினசாமி
3.பாண்டியன்
4.ஜெயராஜ்
5.தர்மராஜ்
6.செல்வராஜ்
7.வசந்தா
8.வனஜா
9.ருக்மணி
10 இளங்கோவன்
11 கனிமொழி
12 வசந்தன்
13 பத்மாவதி
14.அருள்முருகன்
15.ஆதிசேசன்
16.செல்வி
17.வளர்மதி
18.அன்பரசன்
19.அறிவழகன்

20.டாக்டர் R.அருள்மொழியான்
21.அல்லி
22.செந்தமிழ்செல்வி
23.பாப்பி
24.வேம்பரசி பிரதிவாதிகள்

இந்நீதிமன்றம் I.A No.340/2017-ல் 13.09.2021 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 2 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நீதிமன்றம் I.A No.126/2019-ல் 11.11.2021 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 18 முதல் 21 வரையிலான பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

1-ஆம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது சட்ட வாரிசுகளான 22 முதல் 24 வரையிலான பிரதிவாதிகள் இந்நீதிமன்றம் I.A No.364/2025-ல் 21.08.2026 அன்று பிறப்பித்த உத்தரவின்படி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நீதிமன்றம் I.A No.398/2021-ல் 04.12.2021 அன்று பிறப்பித்த உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்நீதிமன்றம் I.A No.474/2025-ல் 28.08.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| வாதிகளுக்காக | : | திரு.P.மணிகண்டன் |
| 1-ம் பிரதிவாதி (இறப்பு) | : | திரு.S.விஸ்வநாதன் |
| 2, 22, 24 பிரதிவாதிகளுக்காக | : | திரு.S.கரிகாலன் |
| 3 முதல் 21 பிரதிவாதிகள் | : | தோன்றா தரப்பினர் |
| 23-ம் பிரதிவாதி | : | Party in person |

## தீர்ப்புரை

தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் பங்கு கிடைக்க வேண்டி வாதிகளுக்கு ஆதரவாக ஒரு முதல்நிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரியும், நலஇழப்பம் சரிகட்டி வாதிகளுக்குரிய 2/4 பங்கு பாகம் பிரித்து தந்திட நில அளவையர் உதவியுடன் ஒரு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து இறுதிநிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) திருத்தப்பட்ட வழக்குரை சுருக்கம்:

1.1) வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தந்தையார் ரெத்தினசாமி அவர்களுக்கு 1)ராஜாங்கம், 2)ராணி, 3) சின்னராசு, 4)கலியபெருமாள், 5)ஆறுமுகம், 6)தனபாக்கியம், 7)மாரிமுத்து ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி ரெத்தினசாமி உயிருடன் இருந்தபோது அவருக்கு சொந்தமாக நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் இருந்து அதனை அவர் ஆண்டு அனுபவித்து வந்தார். இந்நிலையில் மேற்படி ரெத்தினசாமி கடந்த 1962–ல் அவருக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அவரது வாரிசுகளுக்கு (இந்த வாதிகள், பிரதிவாதி உள்பட) பாகப்பிரிவினை செய்து கொடுத்தார். பாகப்பிரிவினைக்கு பிறகு ரெத்தினசாமியின் வாரிசுகள் அவரவர்களுக்குரிய பாகத்தின்படி அவரவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்துகொண்டு ஆண்டு அனுபவம் செய்து வருகிறார்கள்.

1.2) இந்த நிலையில் கடந்த 1964–ம் ஆண்டு இறுதியில் மேற்படி ரெத்தினசாமி இறந்துவிட்டார். மேற்படி ரெத்தினசாமி இறப்பிற்கு பிறகு இந்த வாதிகள் மற்றும் பிரதிவாதி , இறந்துபோன ராஜாங்கம் ஆகியோர்களுக்கு பாகமாக கிடைக்கப்பெற்ற தாவாச் சொத்தில் உள்ள

வீட்டினை வாதிகளும், பிரதிவாதி மற்றும் ராஜாங்கம் அனுபவம் செய்து வந்தனர். அதன்படி மேற்படி வாதிகள் மற்றும் பிரதிவாதி மற்றும் ராஜாங்கம் பெயரில் தாவா சொத்தினைப் பொறுத்து பட்டா பெறப்பட்டது. ரெத்தினசாமியின் மூத்த வாரிசான ராஜங்கத்தின் வாரிசுகள் அவருக்குரிய பாகத்தினை இந்த பிரதிவாதியிடம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்.

1.3) வாதிகள் மற்றும் பிரதிவாதி தாவா சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வரும் நிலையில் கடந்த 2010—ம் ஆண்டு தாவா சொத்தின் பின்புற பகுதியில் வாதிகள், பிரதிவாதியிடம் சண்டை செய்ததாக ஒரு பொய் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் 11 நபர்கள் மீது பூதலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் தாவா சொத்து வாதிகள் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. மேலும் வாதிகள் தாவா வீட்டில் தங்களுடைய பொருட்கள், நகைகள், ஆவணங்கள் அனைத்தையும் வைத்துள்ளனர். பிரதிவாதி ஆள்பலம், பணபலம், அரசியல் பலம் மிக்கவர்கள். தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் பங்கு கிடைக்க வேண்டி வாதிகளுக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**1—ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை விவரம்:**</u>

2.1) வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் வன்மையாக மறுக்கிறார். இந்த வழக்கு சட்டப்படியும் நியாப்படியும் பொருன்மைபடியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதிகள் உண்மைக்கு மாறாக பல பொய்யான காரணங்களை கொண்டு இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளனர். பிராது பத்தி (III) 1-ல் சொல்லி உள்ள விவரங்களில் ரெத்தினசாமி மற்றும் அவரது வாரிசுகள் பற்றிய விவரங்கள் சரியே. ஆனால் ரெத்தினசாமியும் அவரது வாரிசுகளும் குடும்ப சொத்துக்களை 1962-ம் ஆண்டு வாய்மொழியாக பிரித்துக்கொண்டனர் என்பது தவறு. குடும்ப சொத்துக்களை பொறுத்து 01-01-1962 தேதியில் ஒரு பாக பத்திரம் எழுதிக்கொண்டு அதனை 03-01-1962 அன்று பூதலூர் சார்பதிவகத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

2.2) மேற்படி பாக பத்திரத்தில் கண்டவாறு அவரவர் பாக வீத சொத்தினை தனித்தனியாக அனுபவித்து வருகின்றனர். மேற்படி பாக பத்திரத்தில் வீடு மற்றும் அதனை சேர்ந்த தோட்டம் பொதுவில் பிரிபடாமல் இருப்பதாக கண்டு எழுதப்பட்டது. அதன்பிறகு வாதிகள், பிரதிவாதியின் தந்தை ரெத்தினசாமி சுண்டையர் அவர்கள் 1964-ல் இறந்தார். இந்த பிரதிவாதி 17.07.1970-ல் தமது சகோதரர் சின்னராசு சுண்டையர் அவர்களுக்கு வீட்டில் உள்ள பிரிபடாத 5/1 பாகத்தினை ஒரு பதிவான பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதிவாங்கினார். அதன்பிறகு இந்த வாதிகளும் இந்த பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ராஜாங்கம் சுண்டையர் ஆகியோர் 1985ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக இந்த தாவா வீட்டினை பிரித்துக்கொண்டனர்.

2.3) அவ்வாறு வாய்மொழியாக பிரிக்கும் காலத்தில் வீதிக்கு அடுத்த வடபுறம் கிழமேல் 26 அடி தென்வடல் 21 அடி உள்ள RCC பாகம் ராஜாங்கம் சுண்டையருக்கு ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் சின்னராசு பாகத்தினை கிரயம் வாங்கிய இந்த பிரதிவாதிக்கும் அதற்கு அடுத்த வடபுறம் உள்ள அறை இந்த பிரதிவாதி பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் உள்ள அறை மற்றும் சமயற்கூடம் ஆகியவை இந்த வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த முதல் வாதி கலியபெருமாள்

ஆசிரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல கிராமங்களில் வசித்து வந்தார். அதுபோல 2ம் வாதி மாரிமுத்துவும் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தபிறகு தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல இடங்களில் பணிபுரிந்து வந்தார்.

2.4) இந்த பிரதிவாதி தாவா கிராமத்திலேயே இருந்து விவசாயம் செய்துவந்ததாலும் 5 –ல் 3 பாகம் இந்த பிரதிவாதிக்கு (கிரயம் மற்றும் பரிவர்த்தனை மூலம்) பாத்தியப்பட்டதால் மீதி உள்ள இரண்டு பங்கினையும் தமக்கே கொடுத்துவிடும்படி இந்த வாதிகளை கேட்டு அவர்களும் ஒப்புக்கொண்டு 1990ம் ஆண்டிலேயே அவர்களது பாகத்திற்காக தலா ரூ.30,000/– வீதம் பெற்றுக்கொண்டனர். மேலும் இந்த பிரதிவாதி எப்போது கேட்டாலும் வந்து கிரய பத்திரம் எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். வாதிகள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதால் இந்த பிரதிவாதியும் அவர்களிடம் தேவைப்படும்பொழுது பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டார். இருப்பினும் தாவா வீடு மற்றும் அதற்கு மேற்கே உள்ள சந்து ஆகியவை முழுவதுமே இந்த பிரதிவாதியின் அனுபோகத்தில்தான் இருந்துவருகிறது.

2.5) தாவா வீட்டிற்கு அடுத்த வடபுறம் உள்ள கொல்லையில் இந்த வாதிகளுக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது. மேற்படி கொல்லை ஆதியிலிருந்தே இந்த பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி கொல்லையை பொறுத்து இந்த பிரதிவாதி மீது இதேநீதிமன்றத்தில் துரைசாமி கொடும்புரார் சொத்து சுவாதீனம் கோரி அ.வ.எண்.121/1976 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு விசாரனைக்கு வரும் காலத்தில் வாதிகளுக்கும் இந்த பிரதிவாதிக்கும் சமரசம் ஏற்பட்டு 01–10–1977 தேதியில் ஒரு சமரச தீர்ப்பாணை ஏற்பட்டது. அந்த சமரச தீரப்பாணையில் தாவா வீட்டிற்கு

வடபுறம்உள்ள கொல்லை பகுதி முழுவதும் இந்த பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு தீரப்பு செய்யப்பட்டுள்ளது.

2.6) இவ்வாறு கொல்லை பகுதியை இந்த பிரதிவாதி தனது சொந்த சொத்தாக பாவித்து சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வெளிப்படையாக இந்த வாதிகளின் உரிமைக்கு எதிராக அனுபவித்து வருகிறார். எனவே இந்த வாதிகளுக்கு கொல்லைபுறத்தில் இருந்த உரிமை அற்றுப்போய்விட்டது. எனவேதான் இந்த வீட்டினை பாகம் பிரிக்கும்பொழுது அதற்கு வடபுறம் உள்ள கொல்லை பாகத்திற்கு உட்படுத்தப்படவில்லை. மேலும் தாவா வீட்டில் முதல் வாதிக்கு உரிய பாகத்திற்காக கிரயத்தை ரூ.30,000/- பெற்றுக்கொண்டது போலவே முதல் வாதிக்கு மேற்படி 1962ம் ஆண்டு பாக பத்திரத்தில் கொடுக்கப்பட்ட நஞ்சை புல எண்.529/1-A-ல் 51 2/3 சென்டில் பாதி பாகத்தை இந்த முதல் வாதி இந்த பிரதிவாதியிடமிருந்து 27-06-1981-ல் பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.3,500/-க்காக எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டார்.

2.7) ஆனால் மேற்படி சொத்தைப் பொறுத்தும் இந்த முதல் வாதி நாளது தேதிவரை இந்த பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. இவ்வாறு இந்த பிரதிவாதி வாதிகள் தமது சொந்த உடன்பிறந்த சகோதரர் என்பதால் அவர்களது பாக சொத்திற்கு பணம் முழுவதையும் கொடுத்துவிட்டு அனுபவித்துவரும் நிலையில் இந்த வாதிகள் இந்த பிரதிவாதியின் மீது சமீபத்தில் ஏற்பட்ட விரோதத்தின்காரணமாக பொய்யான ஆவணங்களை தயார் செய்துகொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வாதிகள் எக்காலத்திலும் இந்த தாவா சொத்தில் குடியிருந்ததில்லை. 2ம் வாதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த காலத்தில் வருவாய்துறையில் செல்வாக்கு மிக்கவராக

இருந்துவந்தார். தமது செல்வாக்கினை பயன்படுத்தி அவர் தமக்கு ஆதரவாக பல ஆவணங்களை தயார் செய்துகொண்டுள்ளார்.

2.8) மேற்சொன்னவாறு இந்த தாவா வீடு 1985ம் ஆண்டிலேயே வாதிகளுக்கும் இந்த பிரதிவாதிக்கும் இந்த வழக்கில் சேராத ராஜாங்கத்திற்கும் வாய்மொழியாக பாக பிரிவினை செய்யப்பட்டது. எனவே இந்த தாவா சொத்து பிரிபடாத சொத்து என வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த 2ம் வாதி நிரந்தரமாக சித்திரக்குடி கிராமத்தில் மெயின் ரோட்டில்தான் வசித்து வருகிறார். முதல் வாதி நிரந்தரமாக பூதலூரில் சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு நிரந்தரமாக வசித்து வருகிறார். ஆனால் இந்த வழக்கிற்காக தாவா சொத்தில் அவர் குடியிருப்பதுபோல பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இந்த முதல் வாதி அவர் பணியில் இருந்த காலத்தில் அடிக்கடி ஊர்களுக்கு மாற்றலாகி செல்லவேண்டி இருந்ததால் ஆவணங்களை ஒரு இரும்பு பீரோவில் வைத்துபூட்டி அதனை பிரதிவாதி வசம் ஒப்படைத்திருந்தார்.

2.9) இந்த பிரதிவாதி முதல் வாதிக்காக இந்த பீரோவை தமது வீட்டில் வைத்து பாதுகாத்து வருகிறார். இதைத் தவிர தாவா சொத்தில் எந்தவித அனுபவமும் கிடையாது. இந்த வாதிகள் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லியிருப்பது முற்றிலும் பொய். 2ம் வாதி வருவாய்துறையில் செல்வாக்கு மிக்கவராக இருந்த காலத்தில் தாவா சொத்துக்கு தமது பெயரையும் சேர்த்து கூட்டு பட்டாவாக பெற்றுள்ளார். ஆனால் மேற்சொன்னவாறு வாதிகள் இருவருமே அவர்களுக்குரிய பாகத்திற்காக இந்த பிரதிவாதியிடமிருந்து தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டுவிட்டனர். எனவே அவர்களுக்கு தாவா சொத்தில் எந்தவித பாத்தியமும் கிடையாது. மேற்சொன்னவாறு முதல் வாதியின்

அலமாரியை தவிர வாதிகளுக்கு சொந்தமான வேறு எந்த சொத்தும் தாவா வீட்டில் கிடையாது.

2.10) தாவா சொத்தைப் பொறுத்து ஏற்கனவே பாக பிரிவினை ஏற்பட்டு வாதி, பிரதிவாதிகளின் சகோதரரான ராஜாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட பங்கினை இந்த பிரதிவாதி 10-11-2004-ல் இந்த வாதிகள் அறிய கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். உண்மையிலேயே தாவா சொத்து பிரிபடாத சொத்தாக இருக்குமேயானால் இந்த வாதி ராஜாங்கத்திற்கு ஒதுக்கிய பாகம் என கிழமேல் 26 அடி தென்வடல் 21 அடி என்று காட்டி பத்திரம் எழுதி வாங்கி பதிவு செய்த காலத்திலேயே வாதிகள் ஆட்சேபனை செய்திருப்பார்கள். ஆனால் நாளது தேதிவரையில் அந்த கிரய பத்திரத்திற்கு வாதிகள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காததிலிருந்தே தாவா சொத்து பிரிபட்ட சொத்து என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

2.11) வாதிகள் இந்த பிரதிவாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய பங்கிற்கு உரிய கிரய தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டுவிட்டு இந்த பிரதிவாதிக்கு அவர்களது பாகத்தை பொறுத்து கிரய பத்திரம் எழுதிக்கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மோசடியாக இந்த வழக்கினை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கிற்கு சொல்லப்பட்ட வழக்கு மூலம் கற்பணையானது. வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித அனுபவமும் இல்லாத நிலையில் கூட்டு அனுபவமாக கருதி நீதிமன்ற கட்டணம் செலுத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது சரியல்ல. எனவே வழக்கு சரியானமுறையில் மதிப்பிடபடாததாலும் சரியான நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தாத காரணத்திற்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதிகளுக்கு இந்த வழக்கில்

எந்தவித பரிகாரமும் கிடைக்ககூடியதல்ல. எனவே வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது.

3) <u>1–ஆம் பிரதிவாதியின் எதிர்பாத்திய கோரிக்கை விவரம்:</u>

3.1) இந்த பிரதிவாதி 17–07–1970–ல் தமது சகோதரர் சின்னராசு சுண்டையர் அவர்களுக்கு வீட்டில் உள்ள பிரிபடாத 5/1 பாகத்தினை ஒரு பதிவான பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதிவாங்கினார். அதன்பிறகு இந்த வாதிகளும் இந்த பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ராஜாங்கம் சுண்டையர் ஆகியோர் 1985ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக இந்த தாவா வீட்டினை பிரித்துக்கொண்டனர். அவ்வாறு வாய்மொழியாக பிரிக்கும் காலத்தில் வீதிக்கு அடுத்த வடபுறம் கிழமேல் 26 அடி தென்வடல் 21 அடி உள்ள RCC பாகம் ராஜாங்கம் சுண்டையருக்கு ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் சின்னராசு பாகத்தினை கிரயம் வாங்கிய இந்த பிரதிவாதிக்கும் அதற்கு அடுத்த வடபுறம் உள்ள அறை இந்த பிரதிவாதி பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் உள்ள அறை மற்றும் சமயற்கூடம் ஆகியவை இந்த வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

3.2) இந்த முதல் வாதி கலியபெருமாள் ஆசிரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல கிராமங்களில் வசித்து வந்தார். அதுபோல 2ம் வாதி மாரிமுத்துவும் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தபிறகு தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல இடங்களில் பணிபுரிந்து வந்தார். இந்த பிரதிவாதி தாவா கிராமத்திலேயே இருந்து விவசாயம் செய்துவந்ததாலும் 5 –ல் 3 பாகம் இந்த பிரதிவாதிக்கு (கிரயம் மற்றும் பரிவர்த்தனை மூலம்) பாத்தியப்பட்டதால் மீதி உள்ள இரண்டு பங்கினையும் தமக்கே கொடுத்துவிடும்படி இந்த வாதிகளை கேட்டு

அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு 1990ம் ஆண்டிலேயே அவர்களது பாகத்திற்காக தலா ரூ.30,000/- வீதம் பெற்றுக்கொண்டனர்.

3.3) மேலும் இந்த பிரதிவாதி எப்போது கேட்டாலும் வந்து கிரய பத்திரம் எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். வாதிகள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதால் இந்த பிரதிவாதியும் அவர்களிடம் தேவைப்படும்பொழுது பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டார். இந்த விபரம் வாதி, பிரதிவாதிகளின் பங்காளியான அருள்முருகன் என்பவருக்கு தெரியும். இருப்பினும் தாவா வீடு மற்றும் அதற்கு மேற்கே உள்ள சந்து ஆகியவை முழுவதுமே இந்த பிரதிவாதியின் அனுபோகத்தில்தான் இருந்துவருகிறது. மேலும் தாவா வீட்டில் வாதிகளுக்கு உரிய பாத்திற்காக கிரயத்தை ரூ.30,000/- பெற்றுக்கொண்டது போலவே முதல் வாதிக்கு மேற்படி 1962ம் ஆண்டு பாக பத்திரத்தில் கொடுக்கப்பட்ட நஞ்சை புல எண். 529/1A-ல் 51 2/3 சென்டில் பாதி பாகத்தை இந்த முதல் வாதி இந்த பிரதிவாதியிடமிருந்து 27-06-1981 பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.3,500/-க்காக எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டார்.

3.4) ஆனால் மேற்படி சொத்தைப் பொறுத்தும் இந்த முதல் வாதி நாளது தேதிவரை இந்த பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. இவ்வாறு இந்த பிரதிவாதி வாதிகள் சொந்த உடன்பிறந்த சகோதரர் என்பதால் அவர்களது பாக சொத்திற்கு பணம் முழுவதையும் கொடுத்துவிட்டு அனுபவித்துவரும் நிலையில் இந்த வாதிகள் இந்த பிரதிவாதியின் மீது சமீபத்தில் ஏற்பட்ட விரோதத்தின்காரணமாக பொய்யான ஆவணங்களை தயார் செய்துகொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இந்த வாதிகள் இந்த பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதாலும் அவர்கள் மேற்படி

தாவா வீட்டிற்கு அவர்களுக்கு உரிய பாகத்திற்கான தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு தாவா வீட்டை இந்த பிரதிவாதியின் அனுபோகத்தில் விட்டுவிட்டதாலும் அதுபோலவே இதன் அடியில் விவரிக்கப்பட்டுள்ள 2ம் இன சொத்திற்காக முழு கிரய தொகை ரூ.3,500/-யும் முதல் வாதி பெற்றுக்கொண்டு அனுபவத்தையும் இந்த பிரதிவாதி வசம் விட்டுவிட்டதாலும் இந்த பிரதிவாதி, வாதிகள் ஒப்புக்கொண்டபடி கிரய பத்திரம் எழுதி பதிவு செய்துகொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் இவ்வளவு காலமாக கிரய பத்திரம் எழுதி வாங்காமல் இருந்துவிட்டார்.

3.5) ஆனால் இந்த வாதிகள் மேற்படி உண்மைகளை மறைத்து இந்த செய்துள்ளதால் தாக்கல் அவர்கள் ஒப்புக்கொண்டபடி கிரய பத்திரம் எழுதிகொடுக்கமாட்டார்கள் வெளிப்படையாகவே தெரிகிறது. எனவே ஏற்றதை ஆற்றும் பரிகாரம் கோரி இந்த பிரதிவாதி இந்த Counter claim மனுவை தாக்கல் செய்துள்ளார். ஏதாவது காரணங்களுக்காக இந்த பிரதிவாதி கோரும் ஏற்றதை ஆற்றும் பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியதல்ல என்று தீர்மானித்தால் மாற்றுப்பரிகாரமாக இந்த பிரதிவாதி வாதிகளுக்கு இந்த தாவா சொத்தில் பாகத்திற்காக கொடுத்த தொகை ரூ.30,000/-த்தை இந்த வாதிகள் திருப்பி கொடுக்கும்படியும் இதனடியில் விவரிக்கப்பட்டுள்ள 2-ம் இன சொத்திற்காக முதல் வாதிக்கு இந்த பிரதிவாதி கொடுத்த தொகை ரூ.3,500/-யும் முதல் வாதி திருப்பி கொடுக்கும்படி மாற்றுப்பரிகாரமாக ஒரு தீர்ப்பும் தீர்ப்பாணையும் வேண்டியும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.6) எனவே இந்த வாதிகள் இந்த மனுவின் முதல் இன சொத்தில் அவர்களுக்கு உரிய 2/4 பாகத்தினை இந்த பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்கும்படியும், இந்த 1-ம் பிரதிவாதி இதன் அடியில் விவரிக்கப்பட்ட 2ம் இன சொத்தினை இந்த பிரதிவாதிக்கு கிரய பத்திரம்

எழுதிக்கொடுக்கும்படியும் ஏற்றதை ஆற்றும் பரிகாரத்திற்காக தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டியும், அவ்வாறு இந்த வாதிகள் கிரய பத்திரம் எழுதி கொடுக்காத பட்சத்தில் நீதிமன்றமே வாதிகளுக்காக இந்த பிரதிவாதி பெயருக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்கும்படியும், அல்லது மாற்றுப்பரிகாரமாக மேற்படி தொகை ரூ.33,500/– வாதிகளிடமிருந்து பிரதிவாதிகளுக்கு கிடைக்கவும், செலவுத்தொகையுடன் இந்த பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கும்படி இந்த எதிர்பாத்திய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>1–ஆம் பிரதிவாதியின் எதிர்பாத்திய கோரிக்கைக்கு வாதியின் பதிலுரை:</u>**

4.1) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்பாத்திய கோரிக்கையில் வாதிகளால் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற அனைத்தும் சுத்தப்பொய். அதை இந்த பிரதிவாதியே ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். எதிர்பாத்திய கோரிக்கை உண்மைக்கும், நீதிக்கும், நியாயத்திற்கும் எதிரானதாகவும், பல உண்மைகளை மறைத்து பல பொய்யான காரணங்களை கொண்டு கற்பனையாக பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.2) கடந்த 17.07.1970–ல் பிரதிவாதியின் சகோதரர் சின்னராசுவும், இந்த பிரதிவாதியும் கள்ளக்கூட்டாக இந்த வாதிகளுக்கே தெரியாமல் மேற்படி சின்னராசுக்கு உரிமை இல்லாத தாவா சொத்து சம்பந்தமாக ஏற்படுத்திக்கொண்ட பரிவர்த்தனை பத்திரம் இந்த வாதிகளை எந்த காலத்திலும் கட்டுப்படுத்தாது. அவ்வாறு இந்த பிரதிவாதி எழுதி வாங்கிய பரிவர்த்தனை ஒரு செல்லாத ஆவணமாகும். அதை வைத்துக் கொண்டு

இந்த பிரதிவாதி சட்டப்படி உரிமை கோர முடியாது. கடந்த 1962–ல் பாகம் பிரித்தபிறகு இந்த வாதிகள், பிரதிவாதி மற்றும் வாதிகள், பிரதிவாதியின் மற்றொரு சகோதரர் ராஜாங்கம் ஆகிய நால்வருக்கு மட்டுமே இந்த தாவா வீடு மற்றும் தோட்டம் பொதுவாக ஒதுக்கப்பட்டது.

4.3) இதில் வராத மற்ற வாரிசுகளாகிய சின்னராசுவுக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் இதர சொத்துக்கள் கூடுதலாகவும், பணமாகவும் ஒதுக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் தாவா சொத்து மேற்படி வாதிகள், பிரதிவாதி, மேற்படி ராஜாங்கம் ஆகிய நான்கு பேரின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உரிமையிலும் இருந்து வந்தது. அதன் அடிப்படையில் தாவா வீடு சம அளவுள்ள நான்கு அறைகள் அதன் எதிரே பெரிய கூடம், நான்கு சமையல் அறையும் நால்வரும் பொதுவில் புழங்கி கொள்ள ஒரு விருந்தினர் அறை, அளவில் பெரிய அலுவலக அறையுடன் கட்டப்பட்டது.

4.4) மேற்படி தாவா சொத்திற்கு 4 பேர் பெயரிலும் (வாதிகள், பிரதிவாதி மற்றும் ராஜாங்கம்) பெயரில் சம விகிதத்தில் வீட்டுவரி ரசீதுகள் போடப்பட்டுள்ளது. மின் இணைப்பு மற்றும் டெலிபோன் இணைப்பு ஆகியவை நான்கு நபர்கள் வசித்த இடத்திற்கு 4 கதவு எண்கள் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆண்டு அனுபவித்து வந்தனர். அதன் அடிப்படையில் வாதிகள், பிரதிவாதி மற்றும் ராஜாங்கம் பெயரில் தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் ஆகியவை வழங்கப்பட்டன.

4.5) மேலும் 1985–ல் வாதிகள், பிரதிவாதி மற்றும் ராஜாங்கம் சுண்டையார் வாய்மொழியாக தாவா வீட்டினை பிரித்துக் கொண்டனர் என்று கூறியிருப்பது சுத்தப்பொய். இந்த பிரதிவாதி, ராஜாங்கம் சுண்டையாருக்கு வீதிக்கு வடபுறம் கிழமேல் 26 அடி, தென்வடல் 21 அடி, ஒதுக்கப்பட்டது என்றும் அதற்கு அடுத்து வடபுறம் சின்னராசு பாகத்தினை

கிரயம் வாங்கிய இந்த பிரதிவாதிக்கும் அதுக்கு அடுத்து வடபுறம் உள்ள அறை இந்த பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளது சுத்தப்பொய்.

4.6) தாவா வீட்டின் பொதுவான தின்னை வீட்டிற்குள் செல்லநுழைவாயில், மாடிக்கு செல்ல பொதுவழி, விருந்தினர் அறை, அளவில் நீளமான பொது அலுவலக அறை, அனைத்தும் மேற்படி ராஜாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டதாக கூறும் இடத்தில் உள்ளன. இதிலிருந்தே ராஜாங்கத்திற்கு தாவா வீட்டில் வீதிக்கு வடபுறம் கிழமேல் 26 அடி, தென்வடல் 21 அடி ஒதுக்கியதாக கூறுவது சுத்தப்பொய். இன்றுவரை தாவா வீடு கூட்டு அனுபவத்தில் இருந்த வருகிறது. மேலும் 1-ம் வாதி ஆசிரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் தாவா கிராமத்தை விட்டு வெளியேறி பல கிராமங்களில் வசித்து வந்தார் என்றும், அதுபோல 2ம் வாதி மாரிமுத்துவும் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தபோது தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல கிராமங்களில் பணிபுரிந்து வந்தார் என்று சொல்லி உள்ளது, பணியின் காரணமாக வெளியூர் சென்று பணி செய்து வந்தார்கள் என்பது மட்டும் உண்மை.

4.7) தாவா வீட்டில்தான் இன்று வரை வசித்து வருகிறார்கள். மேலும் தாவா சொத்தில் பிரதிவாதி ஏதோ கிரயம் மற்றும் பரிவர்த்தனை மூலம் 5-ல் 3 பாகம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகவும், மீதி உள்ள 2 பங்கினை தமக்கே கொடுத்துவிடும்படி வாதிகளை கேட்டு அதற்கு அவர்களும் ஒப்புக்கொண்டு 1990-ம் ஆண்டிலேயே அவர்களது பாகத்திற்காக தலா ரூ.30,000/- பெற்றுக்கொண்டனர் என்று கூறியிருப்பது சுத்தப்பொய். அவ்வாறு வாதிகள் எந்த காலத்திலும் இந்த பிரதிவாதிகளிடம் ஒருநயா பைசா கூட வாங்கியது இல்லை. மேலும் வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 30 ஆண்டுகளாக ஒட்டோ, உறவோ, சொந்தமோ, பேச்சுவார்த்தையோ

கிடையாது. மேலும் பிரதிவாதி, எப்போது கேட்டாலும் வந்து கிரய பத்திரம் எழுதிக்கொடுப்பதாக இந்த வாதிகள் இருவரும் உடன் பிறந்தவர்கள் என்பதால் இந்த பிரதிவாதியும் அவர்களிடம் தேவைப்படும் பொழுது பத்திரம் எழுதி வாங்கி கொள்ளலாம் என்று இருந்துவிட்டார் என்று கூறியிருப்பது பொய்.

4.8) இந்த விபரம் வாதிகள், பிரதிவாதியின் பங்காளியான அருள் முருகனுக்கு தெரியும் என்று கூறியிருப்பது சுத்தப்பொய். மேலும் தாவா வீடு மற்றும் அதற்கு மேற்கே உள்ள சந்து ஆகியவை முழுவதும் இந்த பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று கூறியிருப்பது சுத்தப்பொய். இந்த வாதிகள், பிரதிவாதி மற்றும் ராஜாங்கம் சுண்டையார் ஆகியோருக்கு கூட்டு அனுபவமும் உரிமையும் உள்ள சொத்தாகும். தாவா வீட்டில் வாதிகளுக்கு உரிய பாகத்திற்காக கிரயத்தை ரூ.30,000/- பெற்றுக்கொண்டது போலவே முதல் வாதிக்கு மேற்படி 1962-ம் ஆண்டு பாகப்பத்திரத்தில் கொடுக்கப்பட்ட நஞ்சை புல எண். 529/1ஏ-ல் 51 2/3 சென்டில் பாதி பாகத்தை இந்த முதல் வாதி பிரதிவாதியிடமிருந்து 27.06.1981-ல் பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.3500/-க்காக எடுத்துக் கொள்ளும்படி கொடுத்துவிட்டார் என்று கூறியிருப்பது சுத்தப்பொய்.

4.9) மேற்படி புல எண் 529/1ஏ-ல் 51 2/3 சென்ட் இந்த முதல் வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு புல எண்.529/1A4 என்று முதல் வாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்த வருகிறது. இந்த வாதிகள் தாவா வீட்டை இந்த பிரதிவாதியிடம் ஒரு போதும் விற்க முன்வரவும் இல்லை, விற்கவும் இல்லை, அதற்காக தொகை ஏதும் பெறவும் இல்லை. அனுபவத்தையும் பிரதிவாதியிடம் விடவும் இல்லை. தாவா வீடு இன்றுவரை வாதிகள், பிரதிவாதி, ராஜாங்கம், நால்வரின் கூட்டு அனுபவத்திலேயே இருந்து வருகிறது. மேலும் எதிர்பாத்திய கோரிக்கையின் 2-வது இன

சொத்திற்கு முழு கிரய தொகை ரூ.3500/-ஐ முதல் வாதி பெற்றுக்கொண்டு அனுபவத்தையும் இந்த பிரதிவாதி வசம் விட்டவிட்டதாகவும் கிரய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும் கூறியிருப்பது சுத்தப்பொய்.

4.10) பிரதிவாதி கேட்டுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரமோ அல்லது அதற்கு மாற்று பரிகாரமோ கிடைக்கத்தக்கதல்ல. மேலும் எதிர்பாத்திய கோரிக்கைக்காக கூறியுள்ள வழக்கு மூலம் பொய்யானது, கற்பனையானது. மேலும் எதிர்பாத்திய கோரிக்கை பரிகார பத்தி 1) ல் இந்த வாதிகள் மனுவின் முதல் இன சொத்தில் அவர்களுக்குரிய 2/4 பாகத்தினை பிரதிவாதிக்கு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி கூறியிருப்பதிலிருந்தே வாதிகளுக்கு தாவா சொத்தில் 2/4 பாகம் உண்டு என்பதை இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார். ஆகவே 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்பாத்திய கோரிக்கையானது இந்த வாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

5) <u>2-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரை விவரம்:</u>

5.1) வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் 2-ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் மறுக்கிறார். பிராது பத்தி (III) 1-ல் சொல்லி உள்ள விவரங்களில் ரெத்தினசாமி மற்றும் அவரது வாரிசுகள் பற்றிய விவரங்கள் சரியே. ஆனால் ரெத்தினசாமியும், அவரது வாரிசுகளும் குடும்ப சொத்துக்களை 1962ம் ஆண்டு வாய்மொழியாக பிரித்துக் கொண்டனர் என்பது தவறு. குடும்ப சொத்துக்களை பொறுத்து 01-01-1962 தேதியில் ஒரு பாகபத்திரம் எழுதி கொண்டு அதனை 03.01.1962 அன்று பூதலூர்

சார்பதிவகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளனர். அந்த பாக பத்திரத்தில் கண்டவாறு அவரவர் பாகவீத சொத்தினை தனித்தனியாக அனுபவித்து வருகின்றனர்.

5.2) மேற்படி பாக பத்திரத்தில் வீடு மற்றும் அதனை சேர்ந்த தோட்டம் பொதுவில் பிரிபடாமல் இருப்பதாக கண்டு எழுதப்பட்டது. அதன்பிறகு வாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் தந்தையும், 2-ம் பிரதிவாதியின் தாத்தாவுமான ரெத்தினசாமி சுண்டையர் அவர்கள் கடந்த 1964-ஆண்டில் இறந்தார். இந்த 1-ம் பிரதிவாதி 17-07-1970ல் தமது சகோதரர் சின்னராசு சுண்டையர் அவர்களுக்கு வீட்டில் உள்ள பிரிபடாத 5/1 பாகத்தினை ஒரு பதிவான பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதி வாங்கினார். அதன்பிறகு இந்த வாதிகளும் இந்த 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ராஜாங்கம் சுண்டையர் ஆகியோர் 1985ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக இந்த தாவா வீட்டினை பிரித்துக் கொண்டனர்.

5.3) அவ்வாறு வாய்மொழியாக பிரிக்கும் காலத்தில் வீதிக்கு அடுத்த வடபுறம் கிழமேல் 26 அடி தென்வடல் 21 அடி உள்ள ஆர்.சி.சி பாகம் ராஜாங்கம் சுண்டையருக்கு ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் சின்னராசு பாகத்தினை கிரயம் வாங்கிய இந்த 1-ம் பிரதிவாதிக்கும், அதற்கு அடுத்த வடப்புறம் உள்ள அறை இந்த 1-ம் பிரதிவாதி பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது. அதற்கு அடுத்த வடபுறம் உள்ள அறை மற்றும் சமயற்கூடம் ஆகியவை இந்த வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த முதல் வாதி கலியப்பெருமாள் ஆசிரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல கிராமங்களில் வசித்து வந்தார். அதுபோல 2ம் வாதி மாரிமுத்துவும் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தபிறகு தாவா கிராமத்தைவிட்டு வெளியேறி பல இடங்களில் பணிபுரிந்து வந்தார்.

5.4) இந்த 1-ம் பிரதிவாதி தாவா கிராமத்திலேயே இருந்து விவசாயம் செய்து வந்ததாலும், 5 ல் 3 பாகம் இந்த 1-ம் பிரதிவாதிக்கு (கிரயம் மற்றும் பரிவர்த்தனை மூலம்) பாத்தியப்பட்டதால் மீதி உள்ள இரண்டு பங்கினையும் தமக்கே கொடுத்துவிடும்படி இந்த வாதிகளை கேட்டு அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு 1990 ம் ஆண்டிலேயே அவர்களது பாகத்திற்காக தலா ரூ.30,000/- வீதம் பெற்றுக்கொண்டனர். மேலும் இந்த 1-ம் பிரதிவாதி எப்போது கேட்டாலும் வந்து கிரய பத்திரம் எழுதிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். வாதிகள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதால் இந்த 1-ம் பிரதிவாதியும் அவர்களிடம் தேவைப்படும்பொழுது பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டார். இருப்பினும் தாவா வீடு மற்றும்அதற்கு மேற்கே உள்ள சந்து ஆகியவை முழுவதுமே இந்த 1-ம் பிரதிவாதியின் அனுபோகத்தில் தான் இருந்து வருகிறது.

5.5) மேற்படி கொல்லை தாவா வீட்டிற்கு அடுத்த வடபுறம் உள்ள கொல்லையில் இந்த வாதிகளுக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது. ஆதியிலிருந்தே இந்த 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி கொல்லையை பொறுத்து இந்த 1-ம் பிரதிவாதி மீது இதே நீதிமன்றத்தில் துரைசாமி கொடும்புரார் சொத்து சுவாதீனம் கோரி அ.வ.எண்.121/1976 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார். மேற்படி துரைசாமி இறந்தபிறகு அவரது வாரிசுகள் அந்த வழக்கில் வாதிகளாக சேர்க்கப்பட்டு, வழக்கு விசாரணைக்கு வரும் காலத்தில் வாதிகளுக்கும் இந்த 1-ம் பிரதிவாதிக்கும் சமரசம் ஏற்பட்டு 01-10-1977 தேதியில் ஒரு சமரச தீர்ப்பாணை ஏற்பட்டது. அந்த சமரச தீர்ப்பாணையில் தாவா வீட்டிற்கு வடபுறம் உள்ள கொல்லை பகுதி முழுவதும்-இந்த 1-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

5.6) இவ்வாறு கொல்லை பகுதியை இந்த 1-ம் பிரதிவாதி தனது சொந்த சொத்தாக பாவித்து சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வெளிப்படையாக இந்த வாதிகளின் உரிமைக்கு எதிராக அனுபவித்து வருகிறார். எனவே இந்த வாதிகளுக்கு கொல்லைபுறத்தில் இருந்த உரிமை அற்றுப்போய்விட்டது. எனவே தான் இந்த விட்டினை பாகம் பிரிக்கும்போது அதற்கு வடபுறம் உள்ள கொல்லை, பாகத்திற்கு உட்படுத்தப்படவில்லை. மேலும், தாவா வீட்டில் முதல் வாதிக்கு உரிய பாகத்திற்காக கிரயத்தை ரூ.30,000/- பெற்றுக்கொண்டது போலவே முதல் வாதிக்கு மேற்படி 1962 ம் ஆண்டு பாக பத்திரத்தில் கொடுக்கப்பட்ட நஞ்சை புல எண்.529/1-ஏ ல் 51 2/3 சென்டில் பாதி பாகத்தை இந்த முதல் வாதி இந்த 1-ம் பிரதிவாதியிடமிருந்து 27-06-1981 ல் பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூ.3,500/-க்காக எடுத்துக்கொள்ளும்படி கொடுத்துவிட்டார்.

5.7) ஆனால் மேற்படி சொத்தைப்பொறுத்தும் இந்த முதல் வாதி நாளது தேதிவரை இந்த 1-ம் பிரதிவாதிக்கு கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை. இவ்வாறு இந்த 1-ம் பிரதிவாதி வாதிகள் தமது சொந்த உடன்பிறந்த சகோதரர் என்பதால் அவர்களது பாக சொத்திற்கு பணம் முழுவதையும் கொடுத்துவிட்டு அனுபவித்து வரும் நிலையில் இந்த வாதிகள் இந்த 1-ம் பிரதிவாதியின் மீது சமீபத்தில் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக பொய்யான ஆவணங்களை தயார் செய்து கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வாதிகள் எக்காலத்திலும் இந்த தாவா சொத்தில் குடியிருந்ததில்லை. இந்த 2 ம் வாதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த காலத்தில் வருவாய் துறையில் செல்வாக்கு மிக்கவராக இருந்து வந்தார். தமது செல்வாக்கினை பயன்படுத்தி அவர் தமக்கு ஆதரவாக பல ஆவணங்களை தயார் செய்து கொண்டுள்ளார்.

5.8) மேற்சொன்னவாறு இந்த தாவா வீடு 1985ம் ஆண்டிலேயே வாதிகளுக்கும் இந்த 1-ம் பிரதிவாதிக்கும், இந்த வழக்கில் சேராத ராஜாங்கத்திற்கும், வாய்மொழியாக பாக பிரிவினை செய்யப்பட்டது. எனவே இந்த தாவா சொத்து பிரிப்படாத சொத்து என வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த 2ம் வாதி நிரந்தரமாக சித்திரக்குடி கிராமத்தில் மெயின் ரோட்டில் தான் வசித்து வருகிறார். முதல் வாதி நிரந்தரமாக பூதலூரில் சொந்தமாக வீடு கட்டிக் கொண்டு நிரந்தரமாக வசித்து வருகிறார். ஆனால் இந்த வழக்கிற்காக தாவா சொத்தில் அவர் குடியிருப்பதுபோல பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். முதல் வாதி அவர் பணியில் இருந்த காலத்தில் அடிக்கடி பல ஊர்களுக்கு மாற்றலாகி செல்லவேண்டி இருந்ததால் அவரது ஆவணங்களை ஒரு இரும்பு பீரோவில் வைத்து பூட்டி அதனை இந்த 1-ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்திருந்தார்.

5.9) இந்த 1-ம் பிரதிவாதி முதல் வாதிக்காக இந்த பீரோவை தமது வீட்டில் வைத்து பாதுகாத்து வருகிறார். இதைத் தவிர தாவா சொத்தில் எந்தவித அனுபவமும் கிடையாது. இந்த வாதிகள் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லியிருப்பது முற்றிலும் பொய். 2ம் வாதி வருவாய்துறையில் செல்வாக்கு மிக்கவராக இருந்த காலத்தில் தாவா சொத்துக்கு தமது பெயரையும் சேர்த்து கூட்டு பட்டாவாக பெற்றுள்ளார். ஆனால் மேற்சொன்னவாறு வாதிகள் இருவருமே அவர்களுக்கு உரிய பாகத்திற்காக இந்த 1-ம் பிரதிவாதியிடமிருந்து தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டுவிட்டனர். எனவே அவர்களுக்கு தாவா சொத்தில் எந்தவித பாத்தியமும் கிடையாது. மேற்சொன்னவாறு முதல் வாதியின் அலமாரியை தவிர வாதிகளுக்கு சொந்தமான வேறு எந்த சொத்தும் தாவா வீட்டில் கிடையாது.

5.10) தாவா சொத்தைப் பொறுத்து ஏற்கெனவே பாக பிரிவினை ஏற்பட்டு வாதி, 1–ம் பிரதிவாதியின் சகோதரரான ராஜாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட பங்கினை இந்த 1–ம் பிரதிவாதி 10–11–2004 ல் இந்த வாதிகள் அறிய கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார். உண்மையிலேயே தாவா சொத்து பிரிபடாத சொத்தாக இருக்குமேயானால் இந்த வாதி ராஜாங்கத்திற்கு ஒதுக்கிய பாகம் என கிழமேல் 26 அடி தென்வடல் 21 அடி என்று காட்டி பத்திரம் எழுதி வாங்கி பதிவு செய்த காலத்திலேயே வாதிகள் ஆட்சேபனை செய்திருப்பார்கள். ஆனால் நாளது தேதி வரையில் அந்த கிரய பத்திரத்திற்கு வாஹமகள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காததிலிருந்தே தாவா சொத்து பிரிப்பட்ட சொத்து என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

5.11) வாதிகள் இந்த 1, 2 பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய பங்கிற்கு உரிய கிரய தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டுவிட்டு இந்த 1–ம் பிரதிவாதிக்கு அவர்களது பாகத்தை பொறுத்து கிரய பத்திரம் எழுதிக் கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மோசடியாக இந்த வழக்கினை வாதிகள் காக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கிற்கு சொல்லப்பட்ட வழக்கு மூலம் கற்பனையானது. வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித அனுபவமும் இல்லாத நிலையில் கூட்டு அனுபவமாக கருதி நீதிமன்ற கட்டணம் செலத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது சரியல்ல. எனவே வழக்கு சரியான முறையில் மதிப்பிடபடாததாலும் சரியான நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தாத காரணத்திற்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

6) வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது.

<u>**எழு வினாக்கள்**</u>:

1. Whether the plaintiffs are entitled to the relief of Partition of 2/4 shares in the suit property?
2. Whether the defendants are entitled counter claim of Specific Performance inrespect of 1st item of suit property from the plaintiffs?
3. Whether the defendant is entitled to the relief Specific Performance against the 1st plaintiff inrespect of the 2nd item of the suit property?
4. Whether the defendant is entitled to the relief of alternative prayer of recovery of money of Rs.33,500/- from the plaintiffs?
5. To what relief is plaintiff entitled?

7) <u>**சாட்சியங்கள்:**</u>

வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை 1–ம் வாதி நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா.1 முதல்விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 குறுக்கு விசாரணையின்போது வா.சா.ஆ.20 மற்றும் வா.சா.ஆ.21 குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் 2ம் வாதியான திரு.மாரிமுத்து வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை 1–ம் பிரதிவாதி நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது பி.சா.1 முதல்விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் 2ம் பிரதிவாதியான திரு.ரெத்தினசாமி பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.10 முதல் பி.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8)இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

9) **<u>எழு வினா 1:</u>** (Whether the plaintiffs are entitled to the relief of partition of 2/4 shares in the suit property?)

9.1) ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையை நிரூபணம் செய்ய தேவையில்லை – பிரிவு 58 இந்திய சாட்சிய சட்டம். தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 2/4 பாகத்தை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே வேளையில் 1–ஆம் பிரதிவாதி ஆறுமுகம் தாக்கல் செய்துள்ள எதிர்பாத்திய கோரிக்கை (Counter-claim)–ன் முதல் இன சொத்தில் வாதிகளுக்குரிய 2/4 பாகத்தினை 1–ஆம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுக்க வாதிகளுக்கு உத்தரவிடக் கோரியுள்ளார். மேற்படி எதிர்பாத்திய கோரிக்கை (Counter-claim)–ல் முதல் இன சொத்தாக தாவா சொத்தை குறிப்பிட்டு காட்டியுள்ளார். அதாவது தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் உள்ளது என்பதை 1–ஆம் பிரதிவாதி ஆறுமுகம் எதிர்பாத்திய கோரிக்கை வாயிலாக ஒப்புக்கொண்டுள்ளார்.

9.2) தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 2/4 பாகத்தை 1–ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுப்பதாக கூறி வாதிகள் தங்களது பாகத்திற்குரிய பணம் தலா ரூ.30,000/–ஐ 1–ஆம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டு தங்களது பாகத்திற்குரிய சொத்தை 1–ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டதாகவும், ஆனால் வாதிகள் ஒப்புக்கொண்டது போல் கிரையம் செய்து கொடுக்காததால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும் அந்த பரிகாரம் நிராகரிக்கப்பட்டால் மாற்று பரிகாரமாக ரூ.30,000/–ஐ

வாதிகள் 1–ஆம் பிரதிவாதியிடம் திருப்பிக் கொடுக்க உத்தரவிட வேண்டும் என்றும் எதிர்பாத்திய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.3) எதிர்பாத்திய கோரிக்கையில் 1–ஆம் பிரதிவாதி வாதிகளுக்குரிய பாகத்திற்காக தலா ரூ.30,000/–ஐ கொடுத்ததாக ஒருபுறம் கூறிவிட்டு, வாதிகள் இருவருக்கும் ரூ.30,000/–ஐ கொடுத்ததாக மறுபுறம் கூறியுள்ளார். இதில் எது உண்மை? என்ற வினா எழுகிறது. எதிர்பாத்திய கோரிக்கை வழக்கு மதிப்பீட்டு விபரத்தில் ரூ.30,000/–ஐ மட்டும் குறிப்பிட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் வாதிகள் இருவருக்கும் 1–ஆம் பிரதிவாதி தலா ரூ.30,000/– கொடுத்திருந்தாரா? அல்லது வாதிகள் இருவருக்கும் சேர்த்து ரூ.30,000/– கொடுத்திருந்தாரா? என்பதை தகுந்த சாட்சியங்கள் மூலம் 1–ஆம் பிரதிவாதி நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார்.

9.4) பி.சா.1 குறுக்கு விசாரணையில் "**வாதி தாவா வீட்டை விற்றுவிட்டு சென்றதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி என்னிடம் ரூ.30 ஆயிரம் பெற்றுக் கொண்டு வீட்டின் அவர் பாகத்தை பொறுத்து என்னிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். <u>வாதியின் மீது இருந்த நம்பிக்கையினால் அவரிடம் நான் ஆவணத்தை எழுதிப் பெறவில்லை</u>. தற்போது ஏற்பட்ட மன வருத்தத்தின் காரணமாக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட ரூ.30 ஆயிரத்தை வாதியிடம் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 1990ம் ஆண்டில் இரண்டு வாதிகளிடமும் தலா ரூ.30 ஆயிரம் பணத்தை நான் கொடுத்து விட்டேன்**" என்று சாட்சி அளித்துள்ளார்.

9.5) பி.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் 1–ஆம் பிரதிவாதி வாதிகளுக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.30,000/– குறித்து இருவேறு விதமாக குறிப்பிட்டுள்ளார். வாதிகள் இருவருக்கும் தலா ரூ.30000/ கொடுத்ததாக 1–ஆம் பிரதிவாதி குறிப்பிட்டுள்ளது உண்மையெனில் எதிர்பாத்திய கோரிக்கையில் ரூ.60,000/–ஐ வாதிகளிடம் கோரியிருக்க வேண்டும். அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தையும் செலுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு 1–ஆம் பிரதிவாதி செய்யவில்லை. ரூ.30,000/–க்கு மட்டுமே நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார். ரூ.60,000/–க்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. இது 1–ஆம் பிரதிவாதியின் மீது சந்தேகத்தை எழுப்புகிறது.

9.6) எனினும், தாவா சொத்தில் வாதிகளின் பாகத்திற்குரிய பணம் ரூ.30,000/–ஐ 1–ஆம் பிரதிவாதி வாதிகளிடம் கொடுத்ததாக சொல்லும் பொருண்மையை 1–ஆம் பிரதிவாதி தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்பதாலும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் உள்ளது என 1–ஆம் பிரதிவாதியே எதிர்பாத்திய கோரிக்கை வாயிலாக ஒப்புக்கொண்டுள்ளதாலும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் கிடைக்கத்தக்கது என்று தீர்வு காண்கிறேன்.

10) **<u>எழு வினா 2:</u>** (Whether the defendants are entitled counter claim of specific performance in respect of 1st item of suit property from the plaintiffs?)

எழு வினா 1–ல் கண்ட தீர்வு 1–ஆம் பிரதிவாதிக்கு பாதகமாக அமைந்துள்ளது. 1–ஆம் பிரதிவாதியின் எதிர்பார்த்திய கோரிக்கை சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் இன சொத்தும், வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்தும் ஒன்றுதான். மேற்படி வழக்கு சொத்தில்

வாதிகளுக்குரிய 2/4 பாகத்தினை கிரையம் பெற 1–ஆம் பிரதிவாதி முழு கிரைய தொகையை கொடுத்ததாக கூறியுள்ள பொருண்மை நிரூபணம் செய்யப்படாததால் 1–ஆம் பிரதிவாதி எதிர்பாத்திய கோரிக்கை சொத்து விபரத்தில் உள்ள முதலாவது இன சொத்தை பொறுத்து கோரியுள்ள குறித்தவகை நிறைவேற்ற (Specific Performance) பரிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

11) **<u>எழு வினா 3:</u>** (Whether the defendant is entitled to the relief specific performance against the 1st plaintiff in respect of the 2nd item of the suit property?)

11.1) எதிர்பார்த்திய கோரிக்கை சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது இன சொத்திற்காக முதலாவது வாதி ரூ.3,500/–ஐ முழுகிரைய தொகையாக பெற்றுக் கொண்டு சொத்தின் சுவாதீனத்தை 1–ஆம் பிரதிவாதி வசம் ஒப்படைத்து விட்டு 1–ஆம் பிரதிவாதி அழைக்கும் போது வந்து கிரையம் செய்து கொடுப்பதாக முதலாவது வாதி உறுதியளித்து இருந்ததாகவும் அதன்படி முதலாம் வாதி நடந்து கொள்ளவில்லை என்பதால் முதலாம் வாதி எதிர்பாத்திய கோரிக்கையின் இரண்டாவது இன சொத்தினை கிரையம் செய்து கொடுக்க உத்தரவிடக் கோரியுள்ளார்.

11.2) மேற்படி எதிர்பாத்திய கோரிக்கையின் இரண்டாவது இன சொத்திற்காக முழு கிரைய தொகையான ரூ.3,500/–ஐ 1–ஆம் பிரதிவாதி 1–ஆம் வாதியிடம் கொடுத்ததை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும். 1–ஆம் வாதி 1–ஆம் பிரதிவாதியிடம் ரூ.3,500/– பெற்றுக் கொண்டதற்கு பற்றுச்சீட்டு என பி.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பி.சா.ஆ.5–ஐ பரிசீலிக்கும் போது "**ரூ.3500 ஆறுமுகத்திற்கு கொடுக்க வேண்டும்.**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11.3) எதற்காக அந்தத் தொகை ரூ.3500/– ஆறுமுகத்திற்கு கொடுக்க வேண்டும் என்ற விபரம் மேற்படி பி.சா.ஆ.5–ல் குறிப்பிடப்படவில்லை. எனவே மேற்கண்ட தொகையான ரூ.3,500/– எதிர்பார்த்திய கோரிக்கையின் 2–வது இன சொத்திற்காக 1–ஆம் வாதிக்கு 1–ஆம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் முழு கிரைய தொகை என்று கருத முடியாது.

11.4) மேலும் பி.சா.1 குறுக்கு விசாரணையில் "**பி.சா.ஆ.5 ஆவணத்தில் புல எண் 529/1ஏ–ல் வாதி பாகத்தை எனக்குத் தருவதாக பிரதிவாதி 27.06.1981ல் பெற்றுக்கொண்ட கடன் தொகையான ரூ.3500/–க்கு எழுதிக் கொடுப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் கடன் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.**" என்று சாட்சி அளித்துள்ளார். மேற்கண்ட சூழலில் எதிர்பாத்திய கோரிக்கை சொத்து விவரத்தில் உள்ள 2–வது இன சொத்தை பொறுத்து 1–ஆம் வாதிக்கு எதிராக 1–ஆம் பிரதிவாதி கோரியுள்ள குறித்தவகை நிறைவேற்றம் (Specific Performance) பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

12) **<u>எழுவினா 4:</u>** (Whether the defendant is entitled to the relief of alternative prayer of recovery of money of Rs.33,500/ from the plaintiffs?)

எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றில் கண்ட தீர்வுகள் 1–ஆம் பிரதிவாதிக்கு பாதகமாக அமைந்துள்ளதால் எதிர்பாத்திய கோரிக்கையில்

வாதிகளுக்கு எதிராக 1–ஆம் பிரதிவாதி கோரியுள்ள மாற்றுப்பரிகாரமாக ரூ.35,000/– 1–ஆம் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

13) **எழு வினா 5:** ( To what relief is plaintiff entitled?)

எழு வினா 1–ல் கண்ட தீர்வு வாதிகளுக்கு சாதகமாக அமைந்துள்ளதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், வேறெந்த பரிகாரமும் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்வு காண்கிறேன்.

14) **இறுதியாக தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/4 பாகம் கிடைக்கத்தக்கது என்று முதல்நிலை தீர்பாணை பிறப்பித்தும், 1–ஆம் பிரதிவாதியின் எதிர்பாத்திய கோரிக்கையை (Counter-Claim) தள்ளுபடி செய்தும், தரப்பினர்களே தங்களது வழக்கு செலவுத்தொகைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டும் வாதிகளின் வழக்கினை அனுமதித்து தீர்ப்பளிக்கிறேன்.**

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்படி காலதாமதமின்றி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க ஏதுவாக வழக்கறிஞர் ஆணையர் நியமிக்க வாதிகள் நடவடிக்கை எடுக்க வழக்கானது 03.08.2026–க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (02.07.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

Sd/– P.Ramesh

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.

1. வாதிகள் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு.கலியபெருமாள் |
| 2 | வா.சா.2 | திரு.மாரிமுத்து |

2. வாதிகள் தரப்பு சான்றாணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 11.08.2007 தேதியிட்டசிட்டா. |
| 2 | வா.சா.ஆ.2 | 11.08.2007 தேதியிட்ட அடங்கல். |
| 3 | வா.சா.ஆ.3 | 22.03.2013 தேதியிட்ட முதல் தகவல்அறிக்கை நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | 2005 முதல் 2009 வரைக்கான குடும்ப அட்டை நகல். |
| 5 | வா.சா.ஆ.5 | 2ம் வாதியின் குடும்ப அட்டை நகல். |
| 6 | வா.சா.ஆ.6 | 2ம் வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல். |
| 7 | வா.சா.ஆ.7 | 03.04.2008 தேதியிட்ட 2-ம் வாதியின் வீட்டு வரி ரசீது அசல். |
| 8 | வா.சா.ஆ.8 | 13.03.2013 தேதியிட்ட 1ம் வாதியின் வீட்டு வரி ரசீது அசல். |
| 9 | வா.சா.ஆ.9 | வாதியின் தாவா வீட்டிற்கு செலுத்திய மின்கட்டண ரசீதுகள்-5. |
| 10 | வா.சா.ஆ.10 | 1ம் வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல். |
| 11 | வா.சா.ஆ.11 | 20.01.2014 தேதியிட்ட 1-ம் வாதியின் பெயரிலுள்ள பட்டா அசல். |
| 12 | வா.சா.ஆ.12 | 27.12.2013 தேதியிட்ட 1-ம் வாதியின் பெயரில் உள்ள சிட்டா. |
| 13 | வா.சா.ஆ.13 | 27.12.2013 தேதியிட்ட 1-ம் வாதியின் பெயரில் உள்ள அடங்கல். |
| 14 | வா.சா.ஆ.14 | 19.02.2015 தேதியிட்ட 2ம் வாதியின் பெயரில் உள்ள |

| | | |
|---|---|---|
| | | வீட்டுவரி ரசீது. |
| 15 | வா.சா.ஆ.15 | 28.08.2014 தேதியிட்ட புல எண்.529/1 ஏ 4–க்கான பசலி 1401 முதல் 1423 வரையான வட்டாட்சியர் வழங்கிய அடங்கல். |
| 16 | வா.சா.ஆ.16 | 27.02.2015 தேதியிட்ட தாவா சொத்திற்கான வீட்டுவரி ரசீது. |
| 17 | வா.சா.ஆ.17 | 07.03.2015 தேதியிட்ட தாவா சொத்தில் குடிநீர் இணைப்பிற்கு செலுத்திய ரசீது. |
| 18 | வா.சா.ஆ.18 | வாதி பெயரில் ஏற்பட்ட வழக்கிடை சொத்திற்கான பட்டா. |
| 19 | வா.சா.ஆ.19 | அடங்கல் பதிவேடு நகல். |
| 20 | வா.சா.ஆ.20 | பி.சா.ஆ.4 ஆவணத்தில் பிரிப்படாத வீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியம். |
| 21 | வா.சா.ஆ.21 | பி.சா.ஆ.4–ல் உள்ள ஆர்.சி.சி கட்டிடம் முன்புறம் ரூம் கிழமேல் 26 அடி, தென்வடல் 21 அடிக்கு கூடுதல் 546 என்ற வாக்கியம். |

3. <u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | பி.சா.1 | திரு.ஆறுமுகம் |
| 2 | பி.சா.2 | திரு.ரெத்தினசாமி |

4. <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1 | 01.01.1962 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல். |
| 2 | பி.சா.ஆ.2 | 17.07.1970 தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| 3 | பி.சா.ஆ.3 | 01.10.1977 தேதியிட்ட சமரசதீர்ப்பாணையின் அ.வ.எண்.12/1976–ன் சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| 4 | பி.சா.ஆ.4 | 10.11.2004 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அசல். |
| 5 | பி.சா.ஆ.5 | 27.06.1981 தேதியிட்ட 1வது வாதி பிரதிவாதியிடம் ரூ.3500/- பெற்றுக்கொண்டதற்காக அவர் கொடுத்த பற்றுச்சீட்டு அசல். |
| 6 | பி.சா.ஆ.6 | 20.03.2003 முதல் 18.03.2015 வரையிலான வீட்டு வரி ரசீதுகள் அசல்-7. |
| 7 | பி.சா.ஆ.7 | 30.03.2009 முதல் 18.03.2015 வரையிலான தண்ணீர்வரி ரசீதுகள் அசல்-3. |
| 8 | பி.சா.ஆ.8 | 13.06.2002 முதல் 09.12.2015 வரையிலான மின் கட்டண ரசீதுகள்- 20 |
| 9 | பி.சா.ஆ.9 | 17.02.1991 தேதியிட்ட 1-ம் வாதியின் மூத்தமகனின் திருமண அழைப்பிதழ். |
| 10 | பி.சா.ஆ.10 | 04.09.1953 நாளிட்ட பூதலூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.1687/1953, (வழக்கு தாக்கல் செய்து நீண்ட காலம் கழித்து இந்த ஆவணம் தாக்கல செய்யப்படுகிறது என வாதிதரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| 11 | பி.சா.ஆ.11 | ஆறுமுகம் சுண்டையார் பெயரிலுள்ள பட்டா பாஸ் புத்தகம் அசல. ( வழக்கு தாக்கல் செய்து நீண்ட காலம் கழித்து இந்த ஆவணம் தாக்கல செய்யப்படுகிறது என வாதிதரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| 12 | பி.சா.ஆ.12 | 03.10.2025 நாளிட்டு பொது தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் இயக்குதலும், பாராமரித்தலும் தஞ்சாவூர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கிய தகவல் அடங்கிய கோப்பு. ( வழக்கு தாக்கல் செய்து நீண்ட காலம் கழித்து இந்த ஆவணம் தாக்கல செய்யப்படுகிறது என வாதிதரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |

| | | |
|---|---|---|
| 13 | பி.சா.ஆ.13 | சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர் HMOP.No.118/1994 உத்தரவு சான்றிட்ட நகல். |
| 14 | பி.சா.ஆ.14 | 09.06.1981 நாளிட்ட தஞ்சாவூர் இணை சார்பதிவாளர் அலுவலகம் செட்டில்மென்ட் ஆவணம் எண்.2193/1981 சான்றிட்ட நகல். (வழக்கு தாக்கல் செய்து நீண்ட காலம் கழித்து இந்த ஆவணம் தாக்கல செய்யப்படுகிறது என வாதிதரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| 15 | பி.சா.ஆ.15 | 12.10.2023 நாளிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |

Sd/- P.Ramesh

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.